## ஆதவ் அர்ஜுன்! எப்பதான் திருந்துவீங்க!

# தி.மு.க. ஆட்சியிலேயே விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை தரப்பட்டது!

## தி.மு.கழக ஐ.டி. விங் விளக்கம்!

சென்னை, ஜூன்.28-

தி.மு. கழக ஐ.டி. விங் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

மேடைக்கு மேடை பொய் பேசுறது பத்தாதுன்னு, இப்போ விளையாட்டு வீராங்கனைகளையும் கூட்டிட்டு வந்து பொய் சொல்ல வைக்கிறீங்களா ஆதவ் அர்ஜுனன்? எப்பதான் பாஸ் திருந்துவீங்க?

கடந்த தி.மு.க. ஆட்சியிலேயே தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை, எலிட் ஸ்கீம் மூலமா நூற்றுக்கணக்கான வீரர்களுக்கு, அவங்க போட்டிக்கு போறதுக்கு முன்னாடியே ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்கு. சட்டமன்றத்திலேயே இதற்கான ஆதாரங்கள் இருக்கு.

இப்படி ஏற்கனவே அமலில் இருக்கும் திட்டங்களை, ஏதோ இந்த ஆட்சியில் தான் முதல்முறை நடப்பது போல ஸ்டிக்கர் ஒட்டி விளம்பரம் தேடுவது வெட்கக்கேடானது. இதற்கு இந்த DIPR வேற துணை போயிட்டு இருக்கு, மக்கள் ஒன்னும் ஏமாளிங்க இல்ல என்று தி.மு.க. ஐ.டி. விங் குறிப்பிட்டுள்ளது.

(அதற்கான ஆதார படங்களை இங்கே வெளியிட்டுள்ளோம்.








ஆறுமுகநேரி பேரூராட்சிக்குட்பட்ட ராணி மகாராஜபுரம் பகுதியில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் நமது முன்னெடுப்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மரக்கன்றுகள் நடப்பட்டுள்ள பகுதியை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி பார்வையிட்டார்.உடன் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



26.06.2026 அன்று தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் திருமதி பி கீதாஜீவன் முன்னிலையில் பல்வேறு மாணவர் அமைப்பினை சேர்ந்த ராஜேஷ், ஆண்ட்ரூஸ், ஆலன் ஜோஷுவா, பிரேம், ஜோயல், வெங்கடேஷ், ரியூரின் பிரியன் ராஜ் உள்ளிட்டோர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக்கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், பஞ்சலிங்கபுரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது ஒன்றிய செயலாளர் பா.பாபு தலைமையில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் ஒன்றிய துணைச் செயலாளர் பிரேமலதா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சுந்தரம், ஊராட்சி கழக நிர்வாகிகள் முத்து, சுப்பையா தாஸ், தனபால், ஆனந்த் உட்பட ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

